**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**கிருஷ்ணகிரி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி**

| அமர்வு வழக்கு எண் | **SC 197 of 2019** | அரசு தரப்பு | **அ.சா.4** |
|---|---|---|---|
| பெயர் | பாரதி | எதிரி தரப்பு | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | கிருஷ்ணசாமி | வயது | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | | |

**Solmnly affirmed in accordance with the provisions of Act X 1873 of 01st day of April 2024.**

**முதல் விசாரணை :**

நான் மேல்சங்கத்தில் வசித்து வருகிறேன். கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை பார்த்ததில்லை. இதற்கு முன்னர் ஜே.ஜே.பி., சேலம் மற்றும் ஊத்தங்கரை நீதித்துறை நடுவர் முன்பாக இந்த வழக்கு குறித்து சாட்சியம் சொல்லியிருக்கிறேன். சுமார் 23 வருடங்களுக்கு முன்னர் தேதி, மாதம் சரியாக தெரியாத நாள் ஒன்றில் எஸ்.எம்.பி.எஸ். பஸ்ஸில் செங்கம் முதல் கிருஷ்ணகிரி வழித்தடத்தில் கிளினராக பேருந்து எண்.1771 ல் சென்றபோது, ஊத்தங்கரையில் இருந்து சுமார் இரவு 7 முதல் 7.15 மணிக்குள் வண்டி புறப்பட்டு கல்லாவி நோக்கி சுமார் 10 கி.மீ, பேருந்து வந்த போது பஸ் மீது சுமார் 4 பேர் கற்களை எறிந்து கண்ணாடியை உடைத்தார்கள். அப்போது திருமாவளவன் வாழ்க என்று சொன்னார்கள். அதற்கு பின்னர் 10, 15 பேர் வந்தார்கள். நாங்கள் இறங்கி ஓடி விட்டோம். உள்ளே இருந்த பயணிகளும் இறங்கிவந்தார்கள்.

அதன் பின்னர் வண்டியை தீ வைத்து கொளுத்தி விட்டார்கள். இது சம்மந்தமாக நடத்துநர் சக்திவேல் கல்லாவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை.

**மறுவிசாரணை:** இல்லை.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Principal District Judge
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Location: Krishnagiri

Principal Sessions Judge,
Krishnagiri.